1982 ஏப்ரல் 7]

சித்திரவதை செய்யப்படும் ஒரு நிலைமையிருக்கிறது. அப்படி ஏதாவது அதன்பேரில் மனு வந்தால் மாண்புமிகு அமைச்சரவர்கள் அதுசம்பந்தமாகப் பரிசீலிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அத்தகைய மனுக்களை சிறைக் கண்காணிப்பாளரே பார்க்கக்கூடாது என்ற ஒரு நடைமுறையைக் கொண்டு வந்துவிட்டால் இப்படிப்பட்ட பிரச்னை எழாது என்று நான் நம்புகிறேன்.

தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு கூட்டமைப்பு மூலம் பிராந்திய கூட்றவு மையம் நிறுவும் திட்டம்

வினா எண். 784 திரு. இரா. தாமரைக்கனி மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புளி, பருப்பு, மிளகாய், சோப்பு, பிளேடு போன்ற பொருட்களை குறைந்த விலையில் வாங்கக் கூடிய பிராந்திய கூட்டுறவு மையம் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு கூட்டமைப்பு மூலம் நிறுவும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேவைப்படும் பொருட்களை உற்பத்தியாளரிடமிருந்து மொத்தமாக மலிவு விலையில் வாங்கி அவைகளின் மூலம் பொது மக்களுக்கு விநியோகம் செய்ய தமிழ்நாடு இணையம் சென்னை சாலிகிராமத்தில் மண்டல விநியோக மையம் ஒன்றை அமைத்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே' சென்னை மாநகரத்தில் மட்டும் இந்தக் கூட்டுறவு பிராந்திய மையம் திறக்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். மற்றும் மாவட்டத் தலைநகரங்களிலேயும், மற்றும் தாலுக்கா தலைநகரங்களிலேயும் இந்தப் பிராந்திய கூட்டுறவு மையம் ஒரு குறிப்பிட்ட கால வரம்புக்குள்ளாகத் திறக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது இருக்கின்ற மார்க்கெட்டிங் சொசைட்டீஸ் கிராம அளவிலே இருக்கின்ற, வட்ட அளவிலே இருக்கின்ற மார்க்கெட்டிங் அக்ரிகல்சுரல் ப்ரொட்யூசர்ஸ் மார்க்கெட்டிங் சொசைட்டி என மாற்றப்பட்டு, உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்யும் பொறுப்பையும், புதிய கூட்டுறவுச் சட்டம் வந்தவுடன் மேற்கொள்ள இருக்கின்றன,

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, உணவு தானிய மற்றும் அத்தியாவசியப் பண்டங்களின் மொத்த வியாபாரத்தை முழுவதையுமே அரசு ஏற்க வேண்டுமென்ற கொள்கை அடிப்படையில் அரிசி, கோதுமை, சமையல் எண்ணெய், சிமெண்ட், சர்க்கரை போன்ற மற்ற அத்தியாவசியப் பண்டங்களின் கொள்முதல் விநியோகப் பொறுப்பையும் இப்பொழுது இல்லாவிட்டாலும் படிப்படியாகவாவது அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த இணையத்தினுடைய தற்போதைய பணிகளுடன், இடைத் தரகர்களை அறவே நீக்கிவிட்டு உற்பத்தி செய்கின்ற உழவர்களிடமிருந்து பொருள்களைக் கொள்முதல் செய்து உபயோகிக்கின்ற நுகர்வோர்களுக்கு நேரடியாகத் தர வேண்டுமென்ற திட்டத்தைத்தான் தற்பொழுது நடைமுறைப் படுத்த அரசு உள்ளது. புதிய கூட்டுறவுச் சட்டம் வந்தவுடன் இடைத்தரகர்கள் என்ற பிரச்னை இல்லாத அளவிற்கு நுகர்வோர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் இடையே அவர்கள் இல்லாமை ஏற்பட வழிவகை செய்யப்படும்.

சேலம் புறநகர்களுக்கு இ. எஸ். ஐ. திட்டத்தை விரிவுபடுத்துதல்

*வினா எண். 785—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் புறநகர்களுக்கு E.S.I. திட்டத்தை நீட்டிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?

(இ) எப்பொழுது செயல்படும்?

(ஈ) எத்தனை பேர்கள் பயன் அடைவார்கள்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) சேலம் புறநகர் பகுதிக்கு ஈட்டுறுதி திட்டத்தை நீட்டித்து, அப்பகுதியில் வாழும் தொழிலாளர்களும், அவர் தம் குடும்பத்தினரும் மருத்துவச் சிகிச்சை பெற, புறநகர் மையப் பகுதியில் ஒரு மருத்துவர் கொண்ட இ.எஸ்.ஐ. மருந்தகத்தை அமைத்து செயல்பட 12-10-81-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

(இ) மருத்துவம் மற்றும் குடும்பநலத் துறை இயக்குநர், மருந்தகம் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுத்து வருகின்றார். இது முடிந்ததும், இவ்வரசு மைய அரசுக்கு திட்டம் செயல்படும் தேதியை நிர்ணயித்து திட்டம் செயல்படுத்துவதற்குரிய அறிக்கையை வெளியிடக் கோரும். இவ்வறிக்கை வெளியானதும் திட்டம் செயல்படும்.

(ஈ) சுமார் 1000 தொழிலாளர்கள் பயன் அடைவார்கள்,